
# ஓஜாஸ் மூலம் நினைவாற்றல் அறிவுத்திறனை மேமபடுத்துங்கள்

'சிந்தனையின் சிகரமே மூளை தான். புத்தி என்பதே மூளைக்குள் தான் பரவிக் கிடக்கிறது. பரிணாம வளர்ச்சியில் மனிதர்களுக்குள் மற்றவற்றுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்ததே புத்தி தான். புத்தி என்பது கண்ணுக்குப் புலப்படாத விஷயமாக இருந்தாலும் இது தான் அற்புதமான அறிவு, நினைவாற்றலுக்கு காரணமாக இருக்கிறது. சரியான ஊக்குவிப்பு மற்றும் உந்துசக்தி இருந்தால் மூளையின் முழுத்திறனையும் உணர்ந்து கொள்ளலாம்' என்கிறார் வேத விற்பன்னரும் ஓஜாஸ் பவுண்டேஷன் நிறுவனருமான தத்வமசி தீக்சித்.



ஓஜாஸ் பவுண்டேஷன் மியூசிக் டுடேயுடன் இணைந்து ஓஜாவின் வாழ்க்கை சக்தி உங்களது நினைவாற்றலையும், அறிவையும் மேம்படுத்துங்கள் என்ற தலைப்பில் இசைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. டில்லி ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் இசை தொகுப்பு 'சிடி'யை ஜி.எம்.ஆர்., குரூப் நிர்வாக இயக்குனர் சீனிவாஸ் போம்மிதாலா வெளியிட்டார். முதல் பிரதியை ஜனாதிபதி அப்துல் கலாம் பெற்றுக் கொண்டார்.

சென்னையில் உள்ள ஓஜாஸ் பவுண்டேஷன் மியூசிக் டுடே-யுடன் இணைந்து 'ஓஜாவின் வாழ்க்கை சக்தி - உங்களது நினைவாற்றலையும், அறிவையும் மேம்படுத்துங்கள்' என்ற தலைப்பில் இசைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது. டில்லி ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் இசை தொகுப்பு சி.டி.,யை ஜி.எம்.ஆர்., குரூப் நிர்வாக இயக்குனர் சீனிவாஸ் போம்மிதாலா வெளியிட்டார். முதல் பிரதியை ஜனாதிபதி அப்துல்கலாம் பெற்றுக் கொண்டார்.

வேதங்களில் உள்ள சில மந்திரங்கள் புத்தியை மேம்படுத்தும் ரகசிய ஆயுதங்களாக செயல்படுகின்றன என்கிறார் தீட்சித். 'மந்திரங்களை கேட்கும் போது மூளையின் பயன்படுத்தப்பட்ட, பயன்படுத்தப்படாத செல்கள் தூண்டப்படுகின்றன. துரதிருஷ்டவசமாக நவீன மனிதர்களால் வேதங்களின் சக்தி மறக்கப்பட்டு விட்டது. மந்திரங்களின் சக்தியை பயன்படுத்திக் கொள்ள பழகி விட்டால், நமது புத்தி, மூளை ஆகியவற்றின் முழு திறமையை நாம் உணர்ந்து விடலாம்' என்கிறார் தீட்சித்.

பல்வேறு வேதங்கள், உபநிஷத்துகளில் இருந்து எடுக்கப்பட்டவை மந்திரங்கள். மந்திரங்களுடன் சேர்ந்து சாராமதி, சரஸ்வதி, வாகதீஸ்வரி, ரேவதி போன்ற ராகங்களும் மூளை செல்களை தூண்டுகின்றன.

அமைதியாக இருக்கும் போது தான் புத்தி நன்கு வேலை செய்கிறது. அதே வேகத்தில் மூளையின் செல்கள் வேலை செய்யும்படி மந்திரங்கள் தூண்டுகின்றன. எனவே, புத்தி வளர்வதற்கான சரியான சூழ்நிலையை ஏற்படுத்தி தர வேண்டும். தொடர்ந்து குறிப்பிட்ட இடைவெளியில் மந்திரங்களை கேட்டு வந்தால், மூளையும், புத்தியும் தேவையில்லாத கவலைகளை, தொல்லைகளை உதறித் தள்ளி விடும். தேவையற்ற சிந்தனைகளில் இருந்து விடுதலை பெற்று, மூளையை புதுப்பித்து, மூளைச் சோர்வை நீக்கும்.

உலகம் முழுவதும் வேதங்களின் பயன்களை பரப்புவதற்காக தோற்றுவிக்கப்பட்டது ஓஜாஸ் பவுண்டேஷன். தொடர்ந்து மந்திரங்களை உச்சரித்தல், தியானம், மனச்சோர்வு நீக்குதல், உணவு மாற்றம், வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்ளுதல் போன்வற்றை இந்த பவுண்டேஷன் வலியுறுத்துகிறது.

ஓஜாவின் சி.டி.,க்கள் கேசட்டுகளை மியூசிக் டுடே நிறுவனம் தான் விற்பனை செய்கிறது. ஒருவரின் உடல், மனம், ஆன்மா போன்றவற்றை ஆன்மிக ரீதியாக ஒருங்கிணைத்து மேம்படுத்தும் முயற்சி இது. 'ஓஜாஸ் - ஆரோக்கியமான இதயத்திற்கு வாழ்க்கை சக்தி', 'ஓஜாஸ் - வருங்கால தாய்மார்களுக்கான வாழ்க்கை சக்தி' போன்றவை ஓஜாஸின் மற்ற வெளியீடுகள்.

மந்திரங்களை உச்சரிக்கும் போது மனதில் ஏற்படும் மாற்றங்கள், பாதிப்புகள் பற்றி சென்னை ஐ.ஐ.டி., மற்றும் சர்வதேச மருத்துவமனை ஆகியவற்றுடன் இணைந்து ஓஜாஸ் ஆய்வு மேற்கொள்ள இருக்கிறது. நரம்பியல் நிபுணர்கள் மற்றும் மனோதத்துவ நிபுணர்களின் உதவியுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். 6 வயது முதல் 18 வயது வரை உள்ளவர்கள் மற்றும் கார்பரேட் கம்பெனிகளின் அதிகாரிகளையும் இந்த சர்வதேச அளவிலான ஆய்வு திட்டத்தில் பங்கு பெற வைக்கப் போகிறோம்' என்கிறார் தீக்சித்.

மேலும் விவரங்களை ஓஜாஸ் பவுண்டேஷன், 22/2, ஜட்ஜ் ஜம்புலிங்கம் ரோடு, சென்னை - 600 004 (போன்: 044-2847 2655, 2847 1841) என்ற முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

DINAMALAR 18/07/04